இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 847/2022

பி.ஆர். ஆதிகேசவன் ... மேல்முறையீட்டாளர்

எதிர்

மெட்ராஸ் உயர் நீதிமன்ற
தலைமை பதிவாளர் மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு.தனன்ஜெய ஒய் சந்திரசூட்:

1. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயமானது, 1971 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் பிரிவு 12 (1) உடன் பிரிவு 2 (சி) (iii)-இன் கீழ் மேல்முறையீட்டாளரை தண்டித்து, இரண்டு வாரங்கள் சாதாரண சிறைத்தண்டனை விதித்து, 2022 ஆம் ஆண்டு மார்ச் 25 அன்று வழங்கிய தீர்ப்புரையிலிருந்து இம்மேல்முறையீடு எழுகிறது.

2. மேல்முறையீட்டாளரின்மீது 1909-ம் ஆண்டு மாகாண நொடிப்பு நிலைச் சட்டத்தின் வகையங்களின்கீழ் மேல்முறையீட்டாளரின்மீது நொடிப்பு நிலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டு மார்ச் 26 அன்று மேல்முறையீட்டாளரை முன்னிலையாகும்படி கோரி, மெட்ராஸ் உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசர் 2021 ஆம் ஆண்டு மார்ச் 12 அன்று பிணையில்விடா பிடியாணையைப் பிறப்பித்தார். 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று, காவல் துறையின் ஒரு குழுவினர் பிடியாணையை நிறைவேற்ற முயன்றபோது மேல்முறையீட்டாளரும், வேறு ஐம்பது வழக்குரைஞர்களும் காவல் துறையினரை முற்றுகையிட்டு, உத்தரவை செயல்படுத்தவிடாமல் தடுத்தனர்.

காவல்துறை துணை ஆணையர், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தின்மூலம் சம்பவத்தை மெட்ராஸ் உயர் நீதிமன்ற தலைமை பதிவாளரின் கவனத்திற்கு கொண்டுசென்றார். இச்சம்பவத்தின் வீடியோ காட்சிகளைப் பரிசீலித்ததன்பேரில், மெட்ராஸ் உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசர் 2021 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் தேதியிட்ட உத்தரவின்மூலம், 1926 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் பிரிவு 15 இன்கீழ் மேல்முறையீட்டாளரின்மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகளைத் தொடங்கினார். தனியமர் நீதியரசரின் உத்தரவு கீழே தரப்பட்டுள்ளது:

> "4. இந்த நீதிமன்றத்தின் உத்தரவுகள் குறித்து காவல்துறையினர், எதிர்மேல்முறையீட்டாளருக்கு தகவல் தெரிவித்ததில் இருந்து தொடங்கி, அதன்பிறகு, எதிர்மேல்முறையீட்டாளரும் அவரது நண்பரான வழக்குரைஞர் ஒருவரும், காவல்துறையினரை எவ்வாறு கேள்வி கேட்கத் தொடங்கினர் என்பதோடு , இந்த நீதிமன்றத்தின் உத்தரவுகளை மட்டுமே செயல்படுத்துகிறேன் என்ற காவல் ஆய்வாளரின் கூற்றுக்கு எதிர்மேல்முறையீட்டாளர் செவிசாய்க்காததுவரையிலான ஒட்டுமொத்த காட்சிகளையும் இந்நீதிமன்றம் பார்வையிட்டுள்ளது. "எதிர்மேல் முறையீட்டாளரின் வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியம் வந்திருந்தார் என்றும், அவர் காவல்துறையினரை தவறாக பேசத் தொடங்கினார் என்றும் காவல்துறை அறிக்கை தெரிவிக்கிறது. அந்த வீடியோ காட்சிகள் அவர் இருப்பதைக் காட்டுகின்றன.அதன்பிறகு, அந்தக் காட்சி முற்றிலும் விரும்பத்தகாததாக மாறியது, ஒரு வீடியோ காட்சியில் , இரண்டு வழக்குரைஞர்கள் ஒரு காவல் அலுவலரை அவதூறான, மரபிற்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பேசி வெளியே இழுக்க முயற்சிப்பதை நான் கண்டேன்.இந்த ஒட்டுமொத்த காட்சியும் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே பொதுச் சாலையில், முழுவதுமாக பொதுமக்கள் பார்வையில் நிகழ்ந்தது. இது நீதி செலுத்துதலில் இடையூறு செய்வதை தவிர வேறேதுமில்லை. எதிர்மேல்முறையீட்டாளரும், உன்னதமான தொழிலில் அங்கம் வகிக்கும் மற்றவர்களும் இச்செயலை செய்துள்ளதால் இது முழுவதுமே மிகவும் கீழ்ப்படியாத செயலாக அமைந்தது. அவர்கள் இந்நீதிமன்றத்தின் கண்ணியத்தை மட்டுமின்றி, இந்நீதிமன்றத்தின் உத்தரவுகளையும் மதிக்கக் கடமைப்பட்டவர்களாவர்.

5. வழக்கு நிலுவையில் இருப்பதை முழுமையாக அறிந்திருந்த எதிர்மேல்முறையீட்டாளர் வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகாததால், இந்நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்கவேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானது. இந்நீதிமன்றத்தின் உத்தரவுகளை செயல்படுத்துவதில் காவல்துறை அதிகாரிகளுக்கு இடையூறு செய்ததற்காக எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியன் மீது முதல்நோக்கிலான அவமதிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றம் அவர்களால் புரியப்பட்ட அவமதிப்புக்குரிய குற்றச்செயலை கவனத்தில் கொள்கிறது."

3. 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதியர் ஈராயம் ஆவணங்களை நுண்ணாய்வு செய்து, மேல்முறையீட்டாளருக்கு எதிரான முதல் நோக்கு வழக்கு நிறுவப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து அவருக்கு அறிவிப்பு அனுப்பியது.2021 ஆம் ஆண்டு அக்டோபர் 26 அன்று, நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக பின்வரும் குற்றச்சாட்டுகளை வனைந்தது:

"வழக்குரைஞர் திரு. பி. ஆர்.ஆதிகேசவன் மற்றும் வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியன், ஆகிய நீங்கள் உங்களின் மேற்சொன்ன நடத்தையின் மூலமாக 31.03.2021 அன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிணையில்விடா பிடியாணையை நிறைவேற்ற அனுமதிக்காமல், நீதி செலுத்துதலில் தலையிட்டு, நீதி செலுத்துதலுக்கு இடையூறு செய்துள்ளதால், நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் 1971, பிரிவு 2 (சி) (iii) இன் கீழ் உங்கள்மீது குற்றஞ்சாட்டப்படுகிறது, இது அதே சட்டத்தின் பிரிவு 12-இன்கீழ் தண்டனைக்குரியதாகும்."

.....

1. இந்த வழக்கு 23.11.2021, 30.11.2021, 21.12.2021, 24.1.2022 மற்றும் 14.2.2022 ஆகிய தேதிகளில் ஒத்திவைக்கப்பட்டது.

4. மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளின்பேரில் நீதியர் ஈராயத்தால் ஐந்து முறை வழக்கு நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன[1]. நீதியராயம் வழக்கினை இறுதியாக ஒத்திவைத்து, 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று பட்டியலிட்டது. எனினும், மேல்முறையீட்டாளர் அடுத்த கேட்புகை தேதிக்கு முன் 'துணை விண்ணப்பங்களை' தாக்கல் செய்தார். நீதியர் ஈராயத்தின் முன்பாக 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று அவமதிப்பு மனுவுடன் சேர்த்து துணை விண்ணப்பங்களும் பட்டியலிடப்பட்டன. மேல்முறையீட்டாளர், அவர் துணை விண்ணப்பங்களை தாக்கல் செய்ததாகவும், மேலும் நீதியர் ஈராயத்திலுள்ள நீதிபதிகளில் ஒருவரை வழக்கிலிருந்து விலக்கக் கோரி மெட்ராஸ் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் முறையீடு செய்ததாகவும் சமர்ப்பித்தார்.

5. இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படுவதற்கு முன்னிலையாகும்படி தனியமர் நீதியரசருக்கு அழைப்பாணை அனுப்பக் கோரி மேல்முறையீட்டாளர் துணை விண்ணப்பங்களை தாக்கல் செய்தார், மேலும் நீதியர் ஈராயத்திலுள்ள நீதிபதிகளில் ஒருவரை வழக்கு விசாரணையிலிருந்து விலகக்கோரி மற்றொரு விண்ணப்பம் தாக்கல் செய்தார்.மேல்முறையீட்டாளர் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களை திரும்பப் பெற்றுக்கொண்டார், அவற்றை மீண்டும் முன்னிலைப்படுத்தவில்லை 2022 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் மூலம் மேல்முறையீட்டாளர் அவமதிப்பு குற்றம்புரிந்தார் எனத் தீர்மானிக்கப்பட்டு, இரண்டு வாரங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் ,ரூ. 2000 அபராதம் செலுத்தும்படியும் உத்தரவிடப்பட்டார். மேலும், மேல்முறையீட்டாளர் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞர் தொழில்புரிய ஓராண்டு காலம் அவருக்கு தடை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளருக்கு எதிராக காவல்துறையினர் உடல் பலத்தை பயன்படுத்தவில்லை என்பதையும், வழக்குரைஞர்கள் கூட்டம் காவல்துறை அலுவலர்களை சூழ்ந்து கொண்டு அவர்களை தவறாகப் பேசியது என்பதையும் படக்காட்சி காட்டுகிறது என நீதிமன்றம் கண்டறிந்தது.மேல்முறையீட்டாளர் பிணையில்விடா பிடியாணையிலிருந்து தப்பிக்க முயன்றார் என்று நீதியர் ஈராயம் கருத்துரைத்தது ; இருந்தாலும் அவர்:

"8.... அவருடைய வழக்குரைஞர்களுடன் காவல்துறையினருடன் சென்றிருக்கலாம்; அங்கு அருகிலுள்ள பூக்கடை காவல்நிலையத்தின் பொதுக் குறிப்பேட்டில் தேவையான பதிவு செய்தபின்னர் அவர் மாண்புமிகு நீதியரசர் பி.டி. ஆஷா அவர்கள் முன்பாக முன்னிலைப்படுத்தப்-பட்டிருப்பார், அவர் முன்பாக மேல்முறையீட்டாளர் விடுதலைக்காக வாதுரைத்திருக்கலாம். அதற்குமாறாக, ஆதிகேசவன் உண்மையை வெளிக்கூறாமல் பாலசுப்ரமணியனை ஏமாற்றி, நீதிமன்றத்தின் சட்டப்பூர்வ உத்தரவை செயல்படுத்தும் காவல்துறையின் கடமையைச் செய்யவிடாமல், அவர்களை தடுப்பதற்கு ஏராளமான வழக்குரைஞர்களை திரட்டினார். மாண்புமிகு நீதியரசர் பி.டி. ஆஷா அவர்கள் பிணையில்விடா பிடியாணை பிறப்பித்தது சரியா? இல்லையா? என்பது காவல்துறை அலுவலர் முடிவுசெய்யக்கூடிய ஒரு கேள்வியே, ஏனெனில், அவர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அனைத்து சட்டப்பூர்வ உத்தரவுகளையும் செயல்படுத்த மட்டுமே வேண்டும்."

6. மேல்முறையீட்டாளர் 1971 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தின் பிரிவு 19 உடன் 2013 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற விதிகளின் விதி xx-இன் கீழான மேல்முறையீட்டில் இந்நீதிமன்றத்தை அணுகினார்.மேல்முறையீட்டாளர் மன்னிப்பு கோரியுள்ளார் என்றும், இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. கே. கே. மணி வலியுறுத்தியுள்ளார்.

7. வழக்குரைஞர் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மேல்முறையீட்டாளரின் ஒழுக்கம் மற்றும் நடத்தை முற்றிலும் அவமதிப்பானதாகும். அவர்மீது பிணையில்விடா பிடியாணையைச் செயற்படுத்தும்படி தகுதியுடைய காவல்துறை அலுவலர்கள் கோரப்பட்டபோது அதில் நீதிய நடைமுறையைத் தடுப்பதற்கான தெளிவான முயற்சி இருந்தது, அது காணொலியில் பதிவாகியுள்ளது மேல்முறையீட்டாளர் நீதிக்கு இடையூறு ஏற்படுத்துவதில் உடந்தையாக இருந்துள்ளார்.

8. அது மட்டுமின்றி , பிணையில்விடா பிடியாணை பிறப்பித்த மெட்ராஸ் உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசரின்மீது வேண்டுமென்றே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த வழக்கின் கேட்புகையிலிருந்த நீதிபதிகளில் ஒருவரை இதிலிருந்து விலகிக் கொள்ளுமாறு முற்றிலும் முறையற்ற காரணங்களின்பேரில் கோரப்பட்டது. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதியரசர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து ,பின்னர் துணை-விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதற்காக மட்டுமே இந்த வழக்கு நடவடிக்கைகளின் முடிவில் தாமதம் ஏற்படுத்தி மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீட்டாளரால் ஐந்து முறை ஒத்திவைப்பு கோரப்பட்டது. பின்னர் மேல்முறையீட்டாளர், அந்தத் துணை விண்ணப்பங்களையும் பதிவாளர் அலுவலகத்திலிருந்து திரும்பப் பெற்றார், அவற்றை மீண்டும் சமர்ப்பிக்கவில்லை. மேல்முறையீட்டாளருக்கு நீதி செலுத்துதலின்மீது எந்த மதிப்பும் இல்லை.அவமதிப்பு குறித்த காண்முடிவையும் தண்டனையையும் பொருத்தமற்றதென கருதமுடியாது. அதேபோன்று, **ஆர். கே. ஆனந்த் -எதிர்- பதிவாளர், தில்லி உயர் நீதிமன்றம்**[2] எனும் வழக்கில் உள்ள இந்நீதிமன்ற தீர்ப்புரையின்படி ஓராண்டு காலத்திற்கு வழக்குரைஞராக தொழில்புரிய தடைவிதிக்கப்படுகிறது .

.....

2 (2009) 8 எஸ்சிசி 106

9. அதன்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.விண்ணப்பங்கள் ஏதேனும் நிலுவையில் இருப்பின், அவை தீர்வு செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனன்ஜெய ஒய். சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் பேலா எம் திரிவேதி

புதுதில்லி

மே 23, 2022

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."